செ.வ.எண்: 27 நாள்:12.08.2021

**நாகப்பட்டினம் மாவட்டம் பிரதம மந்திரியின் வேலைவாய்ப்பு உருவாக்கும் திட்டததின் (PMEGP) கீழ் புதியதாக தொழில்களை துவங்க வேலை வாய்ப்புகளை உருவாக்கவும், வேலைவாய்ப்பற்ற இளைஞர்களை தொழில் முனைவோராக்கிடவும், மாவட்டத்தில் குறுந்தொழில்கள் தொடங்க அதன் மூலம் வேலைவாய்ப்புகளை உருவாக்குவதற்கு மாவட்ட ஆட்சியர் மருத்துவர்.அ..அருண்தம்புராஜ், இ.ஆ.ப., அவர்கள் அழைப்பு**

புதியதாக தொழில்களை துவங்கி வேலை வாய்ப்புகளை உருவாக்கவும், வேலைவாய்ப்பற்ற இளைஞர்களை தொழில் முனைவோராக்கிடவும் பிரதம மந்திரியின் வேலைவாய்ப்பு உருவாக்கும் திட்டம் மத்திய அரசால் அறிமுகப்படுத்தப்பட்டு ஊரக மற்றும் நகர்புற பகுதிகளில் விண்ணப்பிப்பவர்கள் மாவட்ட தொழில் மையம் (DIC) மூலமாகவும், ஊரக பகுதிகளில் விண்ணப்பிப்பவர்கள் கதர் கிராமத் தொழில்கள் ஆணையம் (KVIC), கதர் கிராமத் தொழில்கள் வாரியம் (KVIB) மூலமாகவும் மற்றும் கயிறு சார்ந்த தொழில்களுக்கு விண்ணப்பிப்பவர்கள் கயிறு வாரியம் (COIR BOARD) மூலமாகவும் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. மாவட்டத்தில் குறுந்தொழில்கள் ஆரம்பிக்கப்பட்டு, அதன் மூலம் வேலைவாய்ப்புகளை உருவாக்குவது இத்திட்டத்தின் நோக்கமாகும். இத்திட்டத்தின் கடன் பெற 18 வயதுக்கு மேல் இருக்க வேண்டும். உற்பத்தி தொழில் திட்ட மதிப்பீடு10 இலட்சத்துக்கு மேலும் சேவைத் தொழில் திட்ட மதிப்பீடு 5 இலட்சத்துக்கு இருப்பின் 8-ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்றிருக்கவேண்டும். வருமான வரம்பு தேவையில்லை. மேலும் அதிகபட்ச திட்ட மதிப்பீடு உற்பத்தி சார்ந்த தொழில்களுக்கு ரூ.25.00 இலட்சம் வரையிலும், சேவை சார்ந்த தொழில்களுக்கு ரூ.10.00 இலட்சம் வரையிலும் திட்ட மதிப்பீடாக வழங்கப்படுகிறது.

மேலும், திட்ட முதலீட்டில் விளிம்புத் தொகையாக பொது பிரிவினர் 10 சதவீதமும், சிறப்பு பிரிவினர் (பிற்படுத்தப்பட்டோர் / மிகவும் பிற்படுத்தப்பட்டோர் / பெண்கள் / மாற்றுத் திறனாளிகள் /முன்னாள் இராணுவத்தினர் / தாழ்த்தப்பட்டோர் / பழங்குடியினர் மற்றும் திருநங்கைகள்) 5 சதவீதமும் செலுத்த வேண்டும்.

மானியம் பெற பொதுப்பிரிவினக்கு நகரத்திற்கு 15% , ஊரகத்திற்கு 25% , சிறப்புப்பிரிவினர்க்கு நகரத்திற்கு 25% மற்றும் ஊரகத்திற்கு 35% இத்திட்டத்தில் அனைத்து இலாபகரமான உற்பத்தி மற்றும் சேவை சார்ந்த சுற்றுப்புற சூழலுக்கு நன்மை பயக்கும் தொழில்களுக்கு கடன் வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் பயன்பெற விரும்புவோர் விண்ணப்பங்களை www.kviconline.gov.in/pmegp என்ற இணையதளம் மூலம் மட்டும் விண்ணப்பிக்க வேண்டும். மேலும் விவரங்களுக்கு பொது மேலாளர், மாவட்ட தொழில் மையம், நாகப்பட்டினம் அலுவலகத்தை நேரடியாகவோ அல்லது 8925533969 என்ற தொலைபேசி எண் வாயிலாகவோ தொடர்பு கொள்ளலாம் என நாகப்பட்டினம் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் கேட்டுக்கொண்டுள்ளார்கள்.

செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், நாகப்பட்டினம்.